**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு), பல்லடம்**
2024–ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், மார்கழி 26 ம் நாள்

**இ.ம.எண்.2/2023**

**in**

**அ.வ.எண்.43/2010**

1. பாக்கியம்மாள்
2. சரவணகுமார்
3. வேலுமணி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. கருப்பக்காள் (இறந்துவிட்டார்)
2. சண்முக சுந்தரம்
3. சுப்புலட்சுமி
4. ஆறுமுகம்
5. ஆம்மாசை கவுண்டர் (இறந்துவிட்டார்)
6. கிருஷ்ணமூர்த்தி .... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. R. ஸ்ரீசித்ரா தேவி B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.A. பழனிசாமி B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேசன் B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

இம்மனுவில் கூறியபடி 5ம் பிரதிவாதியின் வாரிசை அசல் வழக்கில் 6ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4ன் படி மனுதாரர்கள்/ வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் மனுதாரர் வழக்கின் 3ம் வாதி. மனுதாரர்கள் அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 05.03.2024 அன்று 5ம் பிரதிவாதி காலமாகிவிட்டார். 5ம் பிரதிவாதிக்கு 6ம் பிரதிவாதியான கிருஷ்ணமூர்த்தி மட்டுமே வாரிசு ஆவார். 5ம் பிரதிவாதியின் வாரிசான 6ம் பிரதிவாதியை அசல் வழக்கில் சேர்க்க 5-6-2021க்குள் மனு செய்திருக்க வேண்டும். ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களினாலும் 5ம் பிரதிவாதியின் வாரிசு மற்றும அவர்களின் முகவரியை அறிய முடியாத காரணத்தினாலும் 90 நாட்களுக்குள் மனு செய்ய இயலவில்லை. எனவே 5ம் பிரதிவாதியின் வாரிசான 6ம் பிரதிவாதியை அசல் வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்க அனுமதி வழங்கி இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**2) 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3, 4 எதிர்மனுதாரர்காளல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம்:-**

மனுதாரர்களின் மனு பொய்யானது, சட்டப்படியாக நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்பைடயாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும். 5ம்

எதிர்மனுதாரர் கடந்த 5.3.2021ம் தேதியில் இறந்துள்ளார். ஆனால் இரண்டரை ஆண்டுகள் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேண்டுமென்றே அசல் வழக்கை காலதாமதம் செய்ய வேண்டி உள் நோக்குடன் மனுதாரரால் காலதாமதத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர் உரையின் சுருக்கமாகும்.

3) தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சியங்கள் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் 5ம் பிரதிவாதியின் வாரிசு விபரங்கள் மற்றும அவர்களின் முகவரி குறித்து அறிய முடியாத காரணத்தினால் கடந்த 5–3–2021 அன்று இறந்து போன 5ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக கட்சி சேர்க்க உரிய காலத்தில் மனு செய்ய இயலவில்லை என்றும் எனவே இதனால் 5ம் பிரதிவாதியின் வாரிசான 6ம் பிரதிவாதியை அசல் வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் வேண்டுமென்றே காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. 6ம் பிரதிவாதி தரப்பில் இந்த மனுவிற்கு எதிர் உரை எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், கடந்த 5-3-2021 அன்று இறந்து போன 5ம் பிரதிவாதியின் வாரிசான 6ம் பிரதிவாதியை அசல் வழக்கில் 6ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதிக்க வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது, இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் 5ம் பிரதிவாதியின் வாரிசான 6ம் பிரதிவாதியை அசல் வழக்கில் கட்சி சேர்க்க ஏற்பட்ட காலதாமதம் மற்றும் அபேட்மெண்ட்டை மன்னிக்கக் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.1/2023, மற்றும் இ.ம.எண்.3/2023 ஆகிய மனுக்கள் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படப் போவதில்லை என்பதாலும், இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும், 6ம் பிரதிவாதியை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் இவ்வழக்கில் இறுதியாக தீர்வு காண இயலாது என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**